<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C.163/2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 21.07.2025.**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 08/01/2022–ம் தேதி மதியம் 02.15 மணிக்கு நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் தலைமை காவலர் மகேந்திர பாபு அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த சுப்ரமணி த/பெ.மாது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 14/2022 ச/பி 294(பி), 324, 506(2) இதச வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

2. பிறகு கடந்த 08.01.2022 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு சம்பவ இடம் சந்துக்காடு வாதி சுப்பிரமணி வீட்டருகில் சென்று சாட்சிகள் கோவிந்தன் மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** மற்றும் வரைபடம் **அ.சா.ஆ5** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் சுப்பிரமணி, கலா, பெருமாள், இந்திரா, கண்ணன், கோவிந்தன், முருகன் மருத்துவர் சரவணகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்ககில் காயம் அடைந்த சுப்பிரமணி என்பவர் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து அவருக்கு விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கில் மருத்துவர் காயம் குறித்து கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். இவ்வழக்கில் விசாரணையில் எதிரி பிரபு , த/பெ.அண்ணாமலை என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரிய வந்ததால் எதிரி நீக்கல் அறிக்கை வாயிலாக நீக்கப்பட்டார். எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

4. இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் கடந்த 21.01.2022ம் தேதியன்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

5. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 21.01.2022 ம் தேதி **குற்றஎண். 14/2022 ச/பி 294(பி), 324, 506(2) இதசவிலிருந்து ச/பி 294(பி), 326, 506(2) இதச** ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.இல்லை**

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.